# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். 199/ந/2017

ஆணை எண். 10/2018

நாள் : 12/01/2018

திரு C. ஜம்புலிங்கம்,
சைதாப்பேட்டை. – முறையீட்டு மனுதாரர்

சம்பந்தப்பட்ட நகராட்சி / மாநகராட்சி
ஆணையாளர்கள் மற்றும்
மண்டல அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர் மனுதாரர்கள்

சென்னை, சைதாப்பேட்டை, காரணி தோட்டம், 27/8, பிரதான தெரு முகவரியில் வசிக்கும் திரு C. ஜம்புலிங்கம் அவர்களின் 16.10.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 17.10.2017 அன்று பெறப்பட்டு, 199/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரிடம் 10.01.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு, கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை, சைதாப்பேட்டை, காரணி தோட்டம், 27/8, பிரதான தெரு முகவரியில் வசிக்கும் திரு C. ஜம்புலிங்கம் என்பவர் தனது முறையீட்டு மனுவில் நகராட்சிப் பணியிலிருந்து 31.01.2004 அன்று வயது மூப்பின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டதாகவும், இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 7 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து பணியின் போது தன் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதிக்கான வட்டித் தொகை வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். முறையீட்டு மனுதாரரிடம் 10.01.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பல்வேறு பதவிகளில் பணியாற்றிய (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) தனக்கு சேமநலநிதிக்கான வட்டித் தொகை வழங்கப் படவில்லை என்பதை விசாரணையின் போதும் குறிப்பிட்டார்.

2. முறையீட்டு மனுதாரர் பணி மூப்பின் காரணமாக ஓய்வு பெற்று சுமார் 13 ஆண்டுகள் கடந்து விட்டன. இத்தனைஆண்டுகளுக்குப் பின்பும் தனக்கு வழங்கப்படவேண்டிய சேமநலநிதிக்கான வட்டித் தொகை வழங்கப்படாத நிலையிலேயே இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். ஓய்வு பெற்ற நகரட்சிப் பணியாளரான திரு C. ஜம்புலிங்கம் அவர்களுக்கு வழங்கப் படவேண்டிய சேமநலநிதிக்கான வட்டித் தொகையினை வழங்குவதற்கான

நடவடிக்கையினை இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் உடன் நடவடிக்கைமேற்கொள்ளுமென இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. மேலும், இது போன்ற நேர்வுகளில் தேவையற்ற கால தாமதத்தினை தவிர்க்குமாறும் சம்பந்தப்பட்ட நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2018– ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள், 12–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப் பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. நகராட்சி ஆணையாளர்,
   காஞ்சிபுரம் பெரு நகராட்சி,
   காஞ்சிபுரம்.

2. நகராட்சி ஆணையாளர்,
   ஆவடி நகராட்சி,
   ஆவடி.

3. நகராட்சி ஆணையாளர்,
   மதுராந்தகம் நகராட்சி,

4. நகராட்சி ஆணையாளர்,
   மேட்டூர் நகராட்சி,

5. நகராட்சி ஆணையாளர்,
   செங்கல் பட்டு நகராட்சி.

6. மண்டல அலுவலர்,
   மண்டலம்– 3,
   பெரு நகர சென்னை மாநகராட்சி.

7. மாநகராட்சி ஆணையர்,
   வேலூர் மாநகராட்சி,
   வேலூர்.

8. திரு C. ஜம்புலிங்கம்,
   27/8, மெயின் தெரு,
   காரணித் தோட்டம்,
   சைதாப்பேட்டை, சென்னை – 600 015.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி

# இணைப்பு

| வ. எண். | நகராட்சிகளின் பெயர் | பணிபுரிந்த பணியிடங்கள் | பணி புரிந்த காலம் |
|---|---|---|---|
| 1. | ஆணையாளர்<br>காஞ்சிபுரம் நகராட்சி. | உதவியாளர்<br><br>உதவியாளர் | 08.09.1982 முதல் 24.01.1983 வரை<br><br>15.03.1988 முதல் 03.08.1988 வரை |
| 2. | ஆணையாளர், ஆவடி நகராட்சி. | உதவியாளர் | 25.01.1983 முதல் 24.01.1984 வரை |
| 3. | ஆணையாளர்,<br>மதுராந்தகம் நகராட்சி | வருவாய் ஆய்வாளர்<br><br>உதவியாளர்<br><br>மேலாளர் ( வகுப்பு 4) | 03.09.1985 முதல் 27.05.1986 வரை<br><br>04.08.1988 முதல் 22.05.1990 வரை<br><br>30.07.1991 முதல் 12.09.1994 வரை |
| 4. | மண்டல அலுவலர்,<br>மண்டல அலுவலகம் – 3,<br>பெருநகர சென்னை மாநகராட்சி, மாதவரம்<br>சென்னை –60<br>(தற்பொழுது சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ளது. | வருவாய் உதவியாளர்<br><br>உதவியாளர் | 28.05.1986 முதல் 14.03.1988 வரை<br><br>23.05.1990 முதல் 29.07.1991 வரை |
| 5. | ஆணையாளர்,<br>மேட்டூர் நகராட்சி | கணக்காளர் (வகுப்பு–2) | 13.09.1994 முதல் 18.06.1996 வரை |
| 6. | ஆணையாளர்,<br>செங்கல்பட்டு நகராட்சி | மேலாளர் (வகுப்பு –2) | 17.06.1999 முதல் 08.05.2001 வரை |
| 7. | ஆணையாளர்,<br>வேலூர் மாநகராட்சி, வேலூர் | வருவாய் அலுவலர்<br>(வகுப்பு 1–A) | 09.05.2001 முதல் 12.09.2001 வரை |

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர். 18/1/18

18/1/18

18/1/18